## தலைவர் கலைஞர் மீதும் எங்கள் குடும்பத்தினரோடும் நட்போடு பழகியவர்!

# வெற்றிப் படங்களின் மூலம் தென்னிந்திய மக்களின் மனதில் என்றும் புகழோடு வாழ்வார்!

## பழம்பெரும் நடிகை 'பத்மஸ்ரீ' திருமதி சவுகார் ஜானகி மறைவுக்கு தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக. 23 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

பழம்பெரும் நடிகை 'பத்மஸ்ரீ' திருமதி சவுகார் ஜானகி அம்மையார் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்ற போதிலும், தமிழில் அறிமுகமான வளையாபதி திரைப்படத்திலயே பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் வரிகளைச் சிறப்பாக உச்சரித்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கவனத்தை ஈர்த்தவர் திருமதி சவுகார் ஜானகி அவர்கள். தலைவர் கலைஞர் அவர்களின் வசனத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் கதாநாயகனாக அறிமுகமான பராசக்தி திரைப்படம் வெளியான அதே சமயத்தில்தான் இத்திரைப்படமும் வெளியானது என்பது குறிப்பிடத்தக்கது.

380-க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த அவரது நீண்ட திரைப்பயணத்தில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், ஜெமினி கணேசன் உள்ளிட்ட பல பெரும் நட்சத்திரங்களுடன் நடித்திருக்கிறார்.

பேரறிஞர் அண்ணா, என்.டி.ஆர். எனப் பல முதலமைச்சர்களின் பாராட்டையும் அன்பையும் பெற்றிருக்கிறார்.

தலைவர் கலைஞர் அவர்களின் மீது அளவுகடந்த மரியாதை கொண்டவராக இருந்து, எங்கள் குடும்பத்தினரோடும் நட்போடு பழகிய



சிறந்த மனிதப் பண்பைக் கொண்டவராக சவுகார் ஜானகி அவர்கள் திகழ்ந்தார்.

புதிய பறவை, நீர்க்குமிழி, பாமா விஜயம், மோட்டார் சுந்தரம் பிள்ளை, எதிர்நீச்சல், இரு கோடுகள், தில்லுமுல்லு என நீண்டுகொண்டே போகும்; அவர் நடித்த வெற்றிப்படங்களின் மூலமாக தென்னிந்திய மக்களின் மனதில் அவர் என்றும் புகழோடு வாழ்வார்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், திரைத்துறையினரு க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## 93 நாட்களாகியும் கேள்விகளுக்கு பதிலில்லை! த.வெ.க. அமைச்சர்களுடைய மெத்தனப் போக்கால்

# மக்கள் பிரச்சினைகள் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன!

## சட்டப்பேரவையில் - எஸ்.ஆஸ்டின் குற்றச்சாட்டு!

**சென்னை, ஆக. 23 -**

**"மக்கள் பிரச்சினைகளை வினாப்பட்டியலில் சேர்த்து, எழுப்பப்பட்ட வினாக்களுக்கு 93 நாட்களாகியும் எந்தப் பதிலும் வரவில்லை" என்றும் "த.வெ.க. அமைச்சர்களுடைய மெத்தனப்போக்கால் மக்கள் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்படுகிறது என்றும் சட்டப் பேரவையில் நாகர்கோயில் எஸ்.ஆஸ்டின் குற்றச்சாட்டை எழுப்பினார்.**



அவரது உரை வருமாறு:-

**எஸ். ஆஸ்டின்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்று இன்றுடன் 103 நாட்கள் ஆகிவிட்டன. சுமார் 227 தொகுதிகளைச் சார்ந்த நம்முடைய உறுப்பினர்களெல்லாம் அந்தந்தத் தொகுதி மக்களுடைய அடிப்படைத் தேவைகளை, பிரச்சினை களை அவையில் வினாக்கள் மூலமாக எழுப்புவதற்காக வினாக்கள் கொடுக்கப்பட்டு சுமார் 93 நாட்கள் ஆகிவிட்டன. வினாக்கள் விடைகள் நேரத்தின் அவசியம் குறித்து பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். நம்முடைய பேரவை விதி 45ன்படி, உறுப்பினர்கள் பேரவைக்கு கொடுத்த வினாக்கள் 15 நாட்களுக்குள்ளாக அனுமதிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அவை அனுப்பப்பட வேண்டும்.

அவ்வாறு அனுமதிக்கப்பட்டு, அனுப்பப்பட்ட துறைகளிலிருந்து அந்தத் துறை அதிகாரிகள்மூலமாக அல்லது அமைச்சர்கள் மூலமாக 42 நாட்களுக்குள்ளாக பேர வைக்கு வர வேண்டும்.

பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்து, 42 நாட்களுக்குள்ளாக இது வினாப் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். ஒருவேளை துறை அதிகாரிகள் காலதாமதமாக கொடுப்பதற்கு காரணம் உங்களிடம் வந்து கேட்டால் அதற்காக இன்னும் 14 நாட்கள் அதாவது இரண்டு வார காலம் கால அவகாசம் கொடுக்கலாம். அந்தக் கால அவகாசத்திற்குப் பிறகும் அந்தப் பதில் வரவில்லை என்று சொன்னால், நீங்கள் அதை வினாப் பட்டியலில் சேர்த்து, இந்த அவையிலே உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்புவதற்கான அனுமதியை வழங்க வேண்டும். அதைத்தான் விதி 45 சொல்கிறது. ஆனால், இன்றைக்கு 93 நாட்கள் ஆகிவிட்டன. இதுவரைக்கும் அந்தக் கேள்விகளுக்கான பதில்கள் வரவில்லை என்று நீங்களும் இரண்டு முறை இங்கு பதிவு செய்துவிட்டீர்கள்.

எனவே, அமைச்சர்களுடைய, அதிகாரிகளுடைய மெத்தனப்போக்கால் இன்றைக்கு மக்களுடைய பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்படுகின்றது.

234 தொகுதிகளிலுள்ள மக்களின் அடிப்படைத் தேவைகள் கிட்டத்தட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கேள்விகள் பேரவைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இன்றைக்கு அவையில் எடுக்கப் படவில்லை. இன்னும் 8 நாட்கள் தான் அவை இருக்கிறது.

இப்போது பத்து, பத்து கேள்வி எடுத்தாலும் 80 கேள்விதான் உங்களால் எடுக்கமுடியும்.

எனவே, யார் இதைக் காலதாமதமாக அனுப்பியிருக்கிறார்கள் அல்லது குறிப்பிட்ட காலவரையறைக்குள் யார் அனுப்ப வில்லையோ அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு notice அனுப்பி, விளக்கம் கேட்டு, அந்த விளக்கம் திருப்தியளிக்க வில்லை என்று சொன்னால், எங்களுக்குச் சொல்லுங்கள். நாங்கள் உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கிறோம்.

இது இந்த பேரவையினுடைய விதியை மீறக் கூடிய தாகும். உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அதை அனுப்ப வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு எஸ்.ஆஸ்டின் பேசினார்.

## ஆய்வுக்குச் சென்றபோது நேரடி ஒளிபரப்பில் – உங்கள் த.வெ.க. ஆட்சியில் நெல் கொள்முதல் நிலையங்களில்

# 50 ரூபாய் இலஞ்சம் பெறுவதாகச் சொன்னதை ஒத்துக் கொள்ளத் தயாரா?

## பேரவையில் – கோவி.செழியன் கேள்வி!

சென்னை, ஆக. 23 -

ஆய்வுக்குச் சென்றபோது நேரடி ஒளிபரப்பில் உங்கள் ஆட்சியில் நெல் கொள்முதல் நிலையங்களில் 50 ரூபாய் லஞ்சம் பெறுவதாகச் சொன்னதை ஒத்துக் கொள்ளத் தயாரா? என பேரவையில் கோவி. செழியன் கேள்வி எழுப்பினார்.

பேரவையில் முன்னாள் அமைச்சர் கோவி. செழியன் பேசியதாவது:

பேரவைத் தலைவர் அவர்களே, மலேசிய தேசிய பல்கலைக்கழகத்தில் Ph.D.,யில் இரண்டாம் ஆண்டு பயின்று வரும் ஆராய்ச்சி மாணவர், பாரதிதாசன் என்பவர் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தின் உதவித்தொகை கிடைக்கவில்லை எனப் பேசியது, சமூக வலைதளங்களில் வெளிவந்திருக்கின்ற சூழலில், அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்ட த்தின் கீழ் வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறதா என்பதை அரசின் கவனத்திற்கு ஈர்த்து அமர்கிறேன். நன்றி.

**பேரவைத் தலைவர்:** இதனை கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவந்த உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்களுக்கு வினா எழுப்ப நான் அனுமதி அளிக்கிறேன். இதுகுறித்து ஏதேனும் வினா இருந்தால் நீங்கள் எழுப்பலாம்.



**முனைவர் கோவி. செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதித் துறை அமைச்சர் சொன்ன, அம்பேத்கர் அயலக உயர் கல்வித் திட்டம் மாணவர் பாரதிதாசன் பெற்ற நிதி என்ற விவரத்தை முழுமையாக சொன்னார், நாங்களும் கேட்டோம். ஆனால், வானத்தில் பறக்கிற விமானத்தைப் பார்த்து விமானத்தில் ஏறுவோமா என்று ஏங்கியிருந்த கிராம ஆதிதிராவிட மக்களுக்கு குறிப்பாக, நீலகிரி மாவட்டம் தேயிலை தோட்டத்து வீட்டுப் பிள்ளைகூட கனடா சென்று பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி படிக்கக்கூடிய அந்தத் திட்டத்தை அறிவித்த தலைவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்த அண்ணன் தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தத் திட்டத்தி ன்கீழ் தான் மாணவர் பாரதிதாசன் பயில்கிறார். 2, 3 தினங்களுக்கு முன்பு இந்தத் திட்டத்தின்கீழ் எல்லா மாணவர்களுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுவிட்டது, என்ற செய்தி பரவியதற்கு பிறகு மாணவர் பாரதிதாசன், அமைச்சர் இது போன்று சொல்கிறார், எனக்கு நிலுவைத் தொகை வரவில்லை, என்ற எண்ணத்தைத்தான் அவர் கருத்தாக வெளியிட்டு, அது இன்றைக்கு வெளியில் மாணவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

அமைச்சர் இந்த தேதியில் இத்தனை இலட்சம், இந்த தேதியில் இத்தனை இலட்சம் என்று சொன்ன அனைத்து நிதி உதவியும் கடந்த திராவிட மாடல் நாயகன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் பாரதிதாசனுக்கு வழங்கப்பட்டது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) மாறாக மாணவர் கருத்து தெரிவித்ததற்குப் பிறகு நிதி ஒதுக்கீடு த.வெ.க. அரசு செய்திருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவித்தால் அது மாணவர்கள் மத்தியில் குறிப்பாக, ஆதிதிராவிட மாணவர்கள் மத்தியில் இருக்கிற ஐயத்தைப் போக்கும் என்று சொல்லி, எல்லாவற்றுக்கும் பிதாமகன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் என்பதை பதிவு செய்து அமர்கிறேன்.

உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நெல் கொள்முதல் நிலையங்களில் கடந்த ஆட்சியில் 50 ரூபாய், 60 ரூபாய் இலஞ்சம் பெறுகிறார்கள் என்று பதிவு செய்திருக்கிறார்.

தஞ்சை மாவட்டத்திற்கு ஆய்வுக்கு வந்தபோது, நேரடியாகக் கேட்கிறார், அப்பொழுதும் அவர்கள் 50 ரூபாய் தருவதாகச் சொல்கிறார்கள். அது ஒளிபரப்பப்பட்டது. அப்படியென்றால், எங்கள் ஆட்சியில் இலஞ்சம் என்று பதிவு செய்கிற நீங்கள் உங்கள் பேச்சு இந்த ஆட்சியிலும் கொள்முதல் நிலையங்களில் 50 ரூபாய் இலஞ்சம் பெறுகிறார்கள் என்று ஒத்துக்கொள்ள தயாரா? அல்லது அவர் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்கத் தயாரா என்பதை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

## பெரம்பலூர் டீக்கடையில் கேஸ் சிலிண்டர் வெடித்து ஏற்பட்ட

# தீ விபத்தில் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்வு!

## பொதுமக்கள் வேதனை!

பெரம்பலூர், ஆக, 23 -

பெரம்பலூர் காமராஜர் வளைவு அருகே அருணாசலம் என்பவருக்கு சொந்தமான டீக்கடையில் கடந்த ஆக.11ம் தேதி அன்று கேஸ் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு சிலிண்டர் வெடித்த சிதறிய தீவிபத்தில் 10 மீட்டர் அளவிற்கு தீப்பிழம்பு ஏற்பட்டது. அதில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த மணிகண்டன், டீ மாஸ்டர் தினேஷ் மற்றும் சகாதேவன், சப்ளையர் ஆறுமுகம், பெண் சப்ளையர் புவனேஸ்வரி, களரம்பட்டியைச் சேர்ந்த விஜயகுமார் ஆகிய 6 பேர் ஏற்கனவே தொடர்ந்து அடுத்தடுத்து உயிரிழந்த நிலையில், நேற்று இரவு 9 மணி அளவில் திருச்சி தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பெரம்பலூர் அசோக் நகரை சேர்ந்த சுப்பிர மணியன் மகன் சிவக்குமார் (52). பரிதாபமாக உயிரிழந்தார். இவருக்கு 50 சதவீதம் தீக்காயம் ஏற்பட்டிருந்தது.

இவரும் கடைக்கு டீ குடிக்க வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் டீக்கடை தீ விபத்தில் ஏற்பட்ட விபத்தில் வலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்தது. மேலும், திருச்சி அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் என 4 பேர் இன்னும் அதிதீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பி டத்தக்கது.

சிலிண்டர் வெடித்த விபத்தில் தொடர்ந்து அடுத்தடுத்து உயிரிழப்புகளாகி வரும் சம்பவம் பெரம்பலூர் பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

டீக்கடைகளில் டீக்குடிக்க அச்சமடைந்து வரும் வேளையில் சாலையோர சில்லிசிக்கன், வடை போண்டா, இட்லி, தோசை விற்கும் சிறு, குறு வணிகர்களுக்கு கேஸ் சிலிண்டரை பாதுகாப்பாக கையாள்வது குறித்த உரிய முறையான பயிற்சியை அளிக்க வேண்டும் என பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இந்த விபத்தில் 7 பேர் இறந்தும் தமிழ்நாடு முதலமைச்சர் தீவிபத்தில் இறந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கவில்லை. மேலும், பல்வேறு விபத்துகளில் இறந்தவர்களுக்கு முதலமைச்சரின் நிவாரண நிதி வழங்கப்படுவது போன்றும் வழங்கப்படவில்லை.


## பா.ஜ.க ஒன்றிய அரசு உருவாக்கிய

# புதிய சட்டமான VB-G-RAM G குழப்பங்களின் கோபுரம்!

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உத்தரவாத சட்டத்திற்கு (Mahatma Gandhi National Rural Employment Guarantee Act MGNREGA) மாற்றாக 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அவசரஅவசரமாக "VBGRAM G" என்ற சட்டம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதலோடு சட்டவடிவம் பெற்றது. ஆனால், அதற்கான துணை விதிகள் 2026 மே மாதம் தொடர்புடைய அமைச்சரவையால் வெளியிடப்பட்டு, ஜூன் மாதம் நடைமுறைக்கு வந்திருக்கிறது. சட்டம் நிறைவேற்றப்பட்ட 2025 டிசம்பர் மாதத்திலிருந்து, விதிகள் நடைமுறைக்கு வந்த 2026 மே மாதம்முடிய இடைப்பட்ட காலத்தில் எந்த விதமான இயக்கமோ முன்னேற்றமோ இந்தச் சட்டத்தின் அடிப்படையில் உருவாகவில்லை.

இந்தச் சட்டத்தின் மூலம் ஒன்றிய அரசும், தொடர்புடைய மாநில அரசுகளும் முறையே 60:40 என்ற விகிதத்தில் செலவினங்களை ஏற்றுக்கொள்ளும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தின் நோக்கம் என்பது கிராமப்புறத்திலுள்ள மக்களுக்கு பயனுள்ள வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும், கிராமப்புற வளர்ச்சிக்கான திட்டப் பணிகளை மேற்கொள்வதுமாகும்.

ஆனால், சட்டமும் விதிகளும் நடைமுறைக்கு வந்தப்பின்னர் இந்தியாவிலுள்ள எந்த மாநிலத்திலும் கணிசமான வேலை வாய்ப்புகள் உருவாக்கப் படவில்லை. மாறாக, ஏற்கனவே மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் உருவாக்கிய வேலை வாய்ப்பு சதவிகிதத்தில் கணிசமாக பாரதீய ஜனதா கட்சியால் உருவாக்கப்பட்ட இந்தச் சட்டத்தின் நடைமுறைக்குப் பின்னர் மக்கள் ஆச்சரியப்படத்தக்க வகையில் குறைந்திருக்கிறது என்பதை "இந்து" ஆங்கில நாளேட்டில் (18.08.26) இத்துறை சார்ந்த அறிஞர்களான Jean Dreze, Mohammed Zameer தெளிவான விளக்கங்களை கட்டுரையில் புள்ளி விவரங்களோடு தெரிவித்திருக்கிறார்கள்.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

ஒன்றிய அரசினுடைய இந்தப் புதிய சட்டத்தால் எந்த பயனும் எந்த மாநிலத்திலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு கிராமப்புற மக்களுக்கு பயனளிக்கவில்லை என்பதை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள்.

இதுமட்டுமல்ல, இந்த புதிய சட்டத்தினை செயல்படுத்துவதில் எத்தகைய விடைகாணவியலாத குழப்பங்களும், மாற்றுவழி காணவியலாத குழப்பங்களும், குதர்க்கங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என்பதை கட்டுரையாளர்கள் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

(The transition the ground reality During the first three months of this financial year (April to June), confusion prevailed. To paraphrase Gramsci, the old world of MGNREGA was dying, and the new world of VB-G-RAM G was struggling to be born. In some districts, MGNREGA functionaries refused to open new works. In many areas, there was no MGNREGA work at all. This was a serious lapse, as MGNREGA is normally at a peak during these summer months (a slack agricultural season in large parts of India). The Limbo continued in July 2026, when VB-G-RAM G made a faltering start.

இந்தப் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்திய கிராமப்புற வளர்ச்சி துறையின் அமைச்சர் புதிய சட்டம் 2026 ஏப்ரல் 1 முதல் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால், ஏப்ரல் மாதம் வரையிலும் புதிய சட்டம் அமல்படுத்தப்படாமையால், முந்தைய மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதி திட்ட சட்டம் தொடர்ந்தது. இந்த நிலையில் 2026 மே மாதம் 22ஆம் தேதி புதிய சட்டத்திற்கான (VBGRAMG) விதிகள் (Rules) பொதுமக்களின் கருத்துக்காக முன்வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஜூன் மாதம் 30ஆம் தேதியில் புதிய சட்டத்திற்கான விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டது. புதிய விதிகள் காலதாமதமாக அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில்கூட எந்த முன்னேற்றமும் புதிய சட்டத்தின் அடிப்படையில் ஏற்படவில்லை என்பதை கட்டுரையாளர்கள் தெளிவுபட உணர்த்தியுள்ளார்கள்.

மேலும், இந்த புதிய சட்டத்தின் அடிப்படையில் எந்த மாற்றமும் கள எதார்த்த நிலைமையில் உருவாகவில்லை. இந்த உண்மைகளை விளக்குவதற்காக கட்டுரையாளர்கள் இந்தப் புதிய சட்டத்தின் அமலாக்கத்திற்கு பின்னால் எந்த அளவிற்கு ஒவ்வொரு மாநிலத்திலும் வேலை வாய்ப்புகள் ஆச்சரியப் படத்தக்க வகையில் குறைந்திருக்கிறது என்பதை விரிவான அட்டவணை யின் மூலம் விளக்கியிருக்கிறார்கள். ஒன்றிய அரசு கொண்டு வந்த சட்டம் (VBGRAMG) என்பது முந்தைய சமூக நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாக்கப் பட்ட மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை உருக்குலைப்பதற்கும் செயலற்று போவதற்கும்தான் பயன்பட்டி ருக்கிறது என்பதை "இந்து" ஆங்கில நாளிதழில், வேலைவாய்ப்பு உறுதி திட்டம்திக்கற்றநிலையில்காட்சிபொருளாகியிருக்கிறது.

இந்த தலைப்பின்கீழ் (Employment Guarantee has slippedintoLimbo)எழுதப்பட்டகட்டுரையைப்படித்தால் மிகத் தெளிவாகவே விளங்கும். ஒன்றிய பா.ஜ.க அரசின் பயனற்ற ஆம்! செயல்படுத்த முடியாத ஒரு புதிய சட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களுக்கு குறைந்தபட்ச வேலை வாய்ப்பை உறுதிசெய்யும் MGNREGA சட்டத்தை சீர்குலைத்திருக்கிறார்கள் என்பதோடு கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் கடுமையானபாதிப்பையும்உருவாக்கியிருக்கிறார்கள். இந்த ஜீவாதாரப் பிரச்சனைக்கு பாசிச ஒன்றிய பா.ஜ.க அரசின் பதில் என்ன? எங்கள் ஆட்சி சர்வரோக சஞ்சீவியாக பயன்பட்டுக்கொண்டிருக்கிறது என்று தண்டோரா போட்டுக்கொண்டிருக்கும் தமிழக வெற்றிக் கழக ஆட்சியின் பதில் என்ன? இதுவே பாதிக்கப்பட்ட கிராமப்புற மக்களின் எதிர்பார்ப்பு!